ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# காருண்யாஹாரம்

காருண்யம் என்பதையும் ஆசார்ய ரத்னாஹாரம் போலே ஒரு ஹாரமாகவே கொள்ளலாம்.

எப்படி என்னில் -

எம்பெருமானுடைய காருண்யம் உயர்ந்ததே. ஆனால் அதில் ஸ்வாதந்த்ர்யம் என்பது கலந்துள்ளது.

அதைத் தடை செய்து சேதனனை உஜ்ஜீவிப்பிக்கச் செய்வது அவள் காருண்யம். எனவே அன்றோ, பிள்ளை லோகாசார்யரும் "ஈச்வர ஸ்வாதந்த்ர்யத்தையும் சேதனனுடைய அபராதத்தையும் கண்டு அகல மாட்டாள்" என்றார். எனவே அவனுடைய காருண்யத்தைக் காட்டிலும் அவளுடைய காருண்யம் உயர்ந்தது என்றே கொள்ள வேண்டும்.

ஆனால் அவள் காருண்யமோ சேதனன் அவனை அவனிடத்தில் அடையும் பொழுதே ப்ரகாசிக்கின்றது. அதைக் காட்டிலும், நாம் இருக்கும் இடமான இவ்வுலகிற்கு வந்து நமக்கு நிலைத்த நல்லுபதேசம் செய்த ஆழ்வார்கள் காருண்யம் உயர்ந்தது என்று கொள்ள வேண்டும்.

அதிலும், இருள்தருமா ஜ்ஞாலத்தை விட்டு விலக்க வேண்டிய ஆழ்வார்களைக் காட்டிலும், மங்களாஶாஸனபரரான பெரியாழ்வாரைக் காட்டிலும், அவர் திருமகளாரும் மதுரகவியாழ்வாரும் காட்டிய காருண்யமே உயர்ந்தது என்று கொள்ளல் வேண்டும்.

ஆனால் அவர்களும் நாம் அனைவரும் இருக்கும் காலம் வரையில் இல்லை. நாம் இருக்கும் காலத்தில் நாம் இருக்கும் தேசத்தில் நாம் இருக்கும் நிலையில், இன்றளவும் நமக்கு உதவும் ஆசார்யர்களின் காருண்யம் ஆழ்வார்களின் காருண்யத்தைக் காட்டிலும் உயர்ந்ததே.

அதிலும் அநுவ்ருத்திப் ப்ரஸன்னாசார்யர்களைக் காட்டிலும், க்ருபாமாத்ரப் ப்ரஸன்னாசார்யர்களைக் காட்டிலும், அருளிச்செயல்களுக்கு வ்யாக்யானம் அருளிய ஆசார்யர்களைக் காட்டிலும், ரஹஸ்யத்ரயங்களுக்கு வ்யாக்யானம் அருளிய ஆசார்யர்களைக் காட்டிலும், அவ்வ்யாக்யானங்களை பின்புள்ளோரும் உணரும் வண்ணம் அருளிய ஆசார்யரான நம் கோயில் மணவாள மாமுனிவன் (மேலும் அவர் அருளியவற்றை இன்று வரை நமக்கு உபதேசித்து வரும் அஸ்மதாசார்யர்கள்) காருண்யமே உயர்ந்தது என்று கொள்ளல் வேண்டும்.

அவ்வாசார்யர்களைக் நமக்குக் காட்டிக் கொடுத்த ஸ்ரீவைஶ்ணவர்கள் காருண்யம் அதனிலும் ஏற்றம் உடைத்து என்று கொள்ள வேண்டும்.

அப்படி நமக்கு ஒரு ஆசார்யனை நல்கிய ஸ்ரீவைஶ்ணவர்களை நம் பக்கல் அனுப்பி வைத்து நம்மைத் திருத்திப் பணிகொள்ளும்படி செய்வித்த மாயவன் அவனே என்பதால் அவன் காருண்யம் அதனிலும் ஏற்றம் உடைத்து என்று கொள்ள வேண்டும்.

ஆக, இது காருண்யாஹாரம் என்பதாயிற்று.

**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்**